உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 06.05.2026 • மலர் 04 • இதழ்: 126 • Edition : Nagercoil • 06.05.2026 • Vol : 04 • Issue : 126 • Page : 4 • Rs. 5/-

### தவெக ஆட்சி அமைக்க விஜய்க்கு பெரும்பான்மை கிடைக்குமா?

# மேஜிக் எண் 118 கட்சிகள் போடும் கணக்கு

சென்னை , மே. 6

தமிழகத்தில் ஆட்சியமைக்க பெரும்பான்மைக்கு தேவையான ‘மேஜிக் எண் 118’ஐ பெற தவெக முயற்சித்து வரும் நிலையில், விஜய்க்கு ஆதரவளிக்க கட்சிகள் போடும் ‘கணக்கு’கள் குறித்து பார்ப்போம்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக 108 இடங்களை பெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்த நிலையில், ஆட்சியமைக்கும் பெரும்பான்மைக்கு 118 எம்எல்ஏக்களின் ஆதரவு தேவை. 108 இடங்களை கைவசம் வைத்துள்ள தவெகவுக்கு, கூடுதலாக 10 முதல் 11 இடங்கள் தேவை.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக, அதிமுக, பாஜக தவிர்த்து காங்கிரஸ் 5, பாமக 4, விசிக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் மற்றும் ஐயுஎம்எல் ஆகியவை தலா 2 தொகுதிகள், தேமுதிக, அமமுக தலா 1 தொகுதிகளில் வெற்றி பெற்றுள்ளன. இந்தக் கட்சிகளில் சிலவற்றை தனது கூட்டணிக்கு கொண்டு வர தவெக தரப்பில் தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



விஜய் தனது பிரச்சாரத்தில் அரசியல் எதிரி என திமுகவை கடுமையாக விமர்சித்தார். அதேபோல பாஜகவை கொள்கை எதிரி எனவும் தொடக்கத்தில் விமர்சித்தார். இதனால், இந்த இரு கட்சிகளோடு விஜய் கூட்டணியமைக்க வாய்ப்பில்லை. அதிமுகவையும் தனது பிரச்சாரத்தில் அவ்வப்போது மறைமுகமாக விஜய் விமர்சித்து வந்தார். எனவே, 47 தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ள அதிமுக, விஜய்க்கு ஆதரவளிக்குமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

திமுக எதிர்ப்பு என்ற ஒரே நோக்கத்தோடு ஒருவேளை விஜய்க்கு அதிமுக ஆதரவளித்தால், பின்னர் தேர்தல் களம் தவெக – திமுக என முற்றிலுமாக மாறிவிடும். இதனால் அதிமுக நிரந்தரமாக 3வது கட்சியாக மாறும் சூழல் உருவாகிவிடும்.

எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து விஜய் மற்றும் திமுகவுக்கு மாற்று என்று அரசியல் செய்தால் மட்டுமே அடுத்தடுத்த தேர்தல்களில் முதன்மைக் கட்சியாக அதிமுக தேர்தலை எதிர்கொள்ளலாம். இதனையெல்லாம் கருத்தில் கொண்டு தவெகவுக்கு அதிமுக ஆதரவளிக்க வாய்ப்பில்லை என்றே அக்கட்சியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காங்கிரஸ் கட்சி கிட்டத்திட்ட தவெகவுக்கு ஆதரவளிக்கும் மனநிலைக்கு சென்றுவிட்டது.

விஜய்க்கு ராகுல் காந்தியிடம் உள்ள தொடர்பு இதற்கான முக்கிய காரணமாக சொல்லப்படுகிறது. அதேபோல ஆட்சியில் பங்கு என்ற அடிப்படையில் சில அமைச்சர் பதவிகளை பெறலாம் என்ற கனவோடு காங்கிரஸார், இப்போதே தவெகவுக்கு ஆதரவளிக்க தயாராகிவிட்டதாகவே சொல்லப்படுகிறது. இதன் காரணமாக 5 உறுப்பினர்களின் ஆதரவு விஜய்க்கு உறுதியாகவிட்டதாகவே பேசப்படுகிறது.

இதனிடையே, செய்தியாளர்களிடம் பேசிய விசிக தலைவர் திருமாவளவன், ‘விஜய்யை எங்கள் எதிரியாக நாங்கள் பார்க்கவில்லை; பாஜக அதிமுகவே எதிரி’ என்றார். எனவே அவரும் ஆட்சியில் பங்கு உள்ளிட்ட சில நிபந்தனைகளுடன் விஜய்க்கு ஆதரவு கொடுக்க வாய்ப்பு உண்டு. விசிகவின் வழியில் இடதுசாரிகளும் விஜய்க்கு ஆதரவளிக்க வாய்ப்புள்ளது என்றே சொல்லப்படுகிறது.

இருப்பினும், இந்த முடிவு திமுகவுக்கு நெருடலை உருவாக்கலாம். ஆனாலும், பாஜகவின் கைங்கர்யத்தை தடுக்க விஜய்க்கு ஆதரவளிக்கிறோம் என்று அவர்கள் ‘கோரஸ்’ ஆக சொல்ல தயாராகிவிட்டதாக விவரமறிந்தவர்கள் சொல்கின்றனர். இதே கணக்கோடு ஐயுஎம்எல் கட்சியும் விஜய்க்கு ஆதரவளிக்கலாம் என்று கூறப்படுகிறது.

அதிமுக கூட்டணியில் உள்ள பாமகவிடமும் தவெக தரப்பு ஆதரவு கேட்டு வருவதாக சொல்லப்படுகிறது. முதல் முறையாக தமிழக அமைச்சரவையில் இடம் பெறும் கனவோடு பாமகவும் தவெகவுக்கு ஆதரவளிக்க முன்வர வாய்ப்புள்ளதாக சொல்லப்படுகிறது. தலா ஓர் இடத்தில் வென்றுள்ள அமமுக மற்றும் தேமுதிகவின் ஆதரவை நாடவும் விஜய் தரப்பு முயற்சித்து வருகிறது.

‘ஆட்சியிலும் அதிகாரத்திலும் பங்கு’ என்று விஜய் தனது முதல் மாநில மாநாட்டிலேயே அறிவித்துவிட்டதால், தவெகவிடம் கூட்டணி வைக்க அனைத்துக் கட்சிகளுக்கும் எந்தச் சிக்கலும் இருக்காது. அதே நேரத்தில், தவெகவுடனான கூட்டணியை தொடர்ந்தால், அடுத்து வரவுள்ள உள்ளாட்சி தேர்தல்களிலும் கணிசமான இடங்களை கைப்பற்றலாம் என்ற கணக்கும் அக்கட்சிகளிடம் உள்ளது.

இதில் இன்னொரு முக்கிய சிக்கலும் உள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள பாமக, காங்கிரஸ் உள்ள கூட்டணியில் இடம்பெறுமா என்பது கேள்விக்குறி. அதுபோல பாமக இடம் பெறும் கூட்டணியில் விசிக, இடதுசாரிகள் இடம்பெறுமா என்பதும் சந்தேகமே. இதனையெல்லாம் தாண்டி 118 என்ற மேஜிக் எண்ணை தொடுவதில்தான் விஜய்யின் சாமர்த்தியம் உள்ளது.

கூட்டணிக் கட்சிகளை நம்பியபடி ஆட்சி நடத்தும் ‘மைனாரிட்டி அரசு’ என்பது மதில் மேல் பூனை நிலைதான் என்றாலும், அதனை லாவகமாக விஜய் கையாளுவார் என தவெகவினர் நம்புகின்றனர்.

அதேபோல தவெகவின் எழுச்சியை இனியும் புறந்தள்ள முடியாது என அரசியல் கட்சிகளும் இப்போது உணர்ந்திருக்கும். இதனால் பெரும்பான்மைக்கு தேவையான ‘மேஜிக் எண் 118’ எளிதாக கிடைக்கும் என்ற உறுதியோடு உள்ளது தவெக.

## கொளத்தூர் தொகுதி மக்களுக்கு நேரில் நன்றி தெரிவித்த மு.க.ஸ்டாலின்



சென்னை மே 6

கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் இன்று அந்த தொகுதி மக்களுக்கு நேரில் நன்றி தெரிவித்தார்.

தமிழக முதல்வராக இருந்த திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தான் போட்டியிட்ட கொளத்தூர் தொகுதியில் தவெக வேட்பாளரிடம் தோல்வியடைந்தார். இதனைத் தொடர்ந்து, தனக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்க இன்று மு.க.ஸ்டாலின் கொளத்தூர் தொகுதிக்கு வருகை தந்தார்.

கொளத்தூர் தொகுதியில் வாகனப் பேரணியாக சென்றபடி வாக்காளர்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார். அவருடன் திமுக எம்எல்ஏ சேகர்பாபுவும் உடனிருந்தார்.

2011ஆம் ஆண்டு முதல் கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்டு ஹாட்ரிக் வெற்றி பெற்றிருந்த மு.க.ஸ்டாலின், இம்முறை தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபுவிடம் தோல்வியடைந்தார். ஜெயலலிதாவுக்குப் பிறகு முதல்வராக இருந்தபோதே தோல்வியடைந்துள்ளார் மு.க.ஸ்டாலின்.

கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட தவெக வேட்பாளர் வி.எஸ்.பாபு 82,997 வாக்குகள் பெற்ற நிலையில், மு.க.ஸ்டாலின் 74,202 வாக்குகள் பெற்று 8795 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தார்.

அதிமுக வேட்பாளர் சந்தான கிருஷ்ணன் 18,430 வாக்குகளும், நாதக வேட்பாளர் சவுந்தர பாண்டியன் 5046 வாக்குகளும் பெற்றனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 தொகுதிகளில் வெற்றி பெற்று தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்து ஆட்சியை பிடிக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## “நாங்கள் தோற்கவில்லை பதவி விலக மாட்டேன்!” மம்தா ஆவேசம்

கொல்கத்தா, மே. 6

“நாங்கள் தோற்கவில்லை; எங்கள் வெற்றி களவாடப்பட்டது. நான் ராஜினாமா செய்யப்போவதில்லை” என்று திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவர் மம்தா பானர்ஜி தெரிவித்துள்ளார்.




மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட இடங்களைக் கைப்பற்றி பாஜக அமோக வெற்றி பெற்றுள்ளது. மேற்கு வங்க அரசியலில் வரலாற்றில் தாமரை வளர்ந்த வெற்றிக் களிப்பில் பாஜகவினர் இருக்கின்றனர்.

இந்நிலையில், திரிணமூல் காங்கிரஸ் கட்சித் தலைவரான மம்தா பானர்ஜி இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், “நாங்கள் தோற்கவில்லை; எங்கள் வெற்றி களவாடப்பட்டது” என்றார்.

மம்தா பானர்ஜி மேலும் பேசுகையில், “நான் முதல்வர் பதவியை ராஜினாமா செய்யப்போவதில்லை. நாங்கள் இந்தத் தேர்தலில் தோற்கவில்லை; மாறாக எங்கள் வெற்றி களவாடப்பட்டது. நான் ராஜினாமா செய்யப் போவதில்லை. அடுத்தக்கட்ட நகர்வு குறித்து எனது கட்சியினர் ஒன்றுகூடி ஒருமித்த முடிவை எட்டுவோம்.

தேர்தலில் பெரியளவில் வன்முறை நடந்துள்ளது. காவல்துறை, தேர்தல் ஆணையம் என அமைப்பு ரீதியிலான தாக்குதல்கள் நடந்துள்ளன.

இந்தத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் தார்மிக வெற்றி பெற்றிருக்கிறது. எங்களுடைய போட்டி பாஜகவுக்கு எதிரானது அல்ல. அது தேர்தல் ஆணையத்துக்கு எதிரானது. இந்தத் தேர்தலில் அவர்கள் நியாயமான வெற்றியைப் பெற்றிருப்பார்கள் என்றால் நான் புலம்பியிருக்க மாட்டேன்.

வாக்காளர் பட்டியலிலேயே அவர்கள் குளறுபடிகளை ஆரம்பித்துவிட்டனர். 90 லட்சம் வாக்காளர்கள் பெயர்களை நீக்கியிருந்தனர். நாங்கள் நீதிமன்றம் சென்று 32 லட்சம் வாக்காளர்கள் பெயரை மீட்டெடுத்தோம். அதன் பின்னர் 7 லட்சம் வாக்காளர்கள் பெயர்கள் இணைக்கப்பட்டன. அது எப்படி என்று இதுவரை யாருக்கும் தெரியாது.

நான் என் வாழ்நாளில் இத்தகைய தேர்தலை சந்தித்ததில்லை. 2004க்குப் பின்னர் இதுபோன்ற அராஜகங்களைப் பார்த்ததும் இல்லை.

வாக்கு எண்ணிக்கையின்போது பரவலாக வன்முறைச் சம்பவங்கள் நடந்தன. முதல் சுற்று முடிவிலேயே ஊடகங்கள் பல பாஜக இத்தனை இடங்களைப் பெறக்கூடும் என்று கூறின. அதன் பின்னர் வாக்குச்சாவடிகளை பாஜக கைக்குள் கொண்டு வந்தது.

காவல் துறையும், மத்தியப் படைகளும் எந்த வன்முறைகளையும் கண்டுகொள்ளவில்லை. அவர்கள் திரிணமூல் காங்கிரஸ் கட்சியினரை துன்புறுத்தினர். எங்கள் கட்சிப் பெண்களை பாலியல் வன்கொடுமை செய்துவிடுவோம் என்று மிரட்டியுள்ளனர். மத்தியப் படைகள் இப்படி செயல்படுவதை நான் இதுவரை பார்த்ததில்லை.

அவர்கள் என்னையும் சுதந்திரமாக நடமாடவிடவில்லை. என்னை அடிவயிற்றிலும், பின்புறத்திலும் எட்டி உதைத்தனர். என்னை வாக்கு எண்ணும் மையத்திலிருந்து தூக்கி வீசினர். ஒரு பெண்ணான என்னிடம் அவர்கள் தகாத முறையில் நடந்து கொண்டனர். ஆனால் இதைப் பற்றியெல்லாம் நாங்கள் யாரிடம் புகார் செய்வோம். எல்லா அமைப்புகளும் பாஜகவால் விலைக்கு வாங்கப்பட்டுவிட்டன.

ஆனாலும், இந்தத் தோல்வியிலிருந்து நாங்கள் மீண்டெழுவோம். நாங்கள் புலியைப் போல் போராடினோம்; இனியும் போராடுவோம். எனக்கு நாற்காலிகள் பற்றி கவலையில்லை. எனக்கு மக்கள் மீதுதான் அக்கறை.

இண்டியா கூட்டணித் தலைவர்கள் தேர்தல் முடிவுக்குப் பின்னர் என்னுடன் பேசினர். சோனியா காந்தி, ராகுல் காந்தி, அரவிந்த் கேஜ்ரிவால், உத்தவ் தாக்கரே, ஹேமந்த் சோரன், தேஜஸ்வி யாதவ் என்னை அழைத்தனர். அவர்கள் எல்லோரும் என்னை ஆதரிக்கின்றனர். அகிலேஷ் யாதவ் நாளை வருகிறார். பின்னர் ஒவ்வொருவராக எனைக் காண வருவார்கள்.

இனிமேல் எனது கவனம் இண்டியா கூட்டணியை வலிமைப்படுத்துவதில் தான் இருக்கும். இப்போது எனக்கு முதல்வர் நாற்காலி கட்டுப்பாடுகள் இல்லை. நான் இனி ஒரு சாமானியர். சுதந்திரப் பறவை.

தேர்தல் வன்முறைகள், குளறுபடிகள் குறித்து ஆராய உண்மை கண்டறியும் குழு ஒன்றை அமைத்துள்ளேன். 10 பேர் கொண்ட இந்தக் குழு, வன்முறை நடந்த இடங்களுக்கு எல்லாம் சென்று ஆய்வு செய்யும்.

ஆனால் பாஜகவுக்கு ஒரு விஷயத்தை எச்சரிக்கையாக சொல்ல விரும்புகிறேன். நீங்கள் மத்தியில் அதிகாரத்தில் இல்லாத போது இதே மாதிரியான நிலைமையை எதிர்கொள்ள நேரிடும்.

உங்களது தேவையெல்லாம் நாடு முழுவதும் ஒற்றைக் கட்சி ஆட்சி. எதிர்க்கட்சியே இருக்கக் கூடாது என்று நினைக்கிறீர்கள். இதுவே தொடர்ந்தால் உங்களது பிம்பம் உடைபடும். ஜனநாயகத்தின் மாண்பை மறந்துவிட்டீர்கள்” என்றார் மம்தா பானர்ஜி.

### 5 இடங்களில் தவெக வெற்றி

# ஈரோடு மாவட்டத்தில் விசில் ஊதியபடி வெற்றியை கொண்டாடிய தவெகவினர்

ஈரோடு மே 6

ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 8 சட்ட சபை தொகுதிகள் உள்ளன. இதில் ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு, கோபி, மொடக்குறிச்சி, பவானி சாகர் ஆகிய 5 தொகுதிகளில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெற்று உள்ளது. கோபிசெட்டிபாளையம் தவெக வேட்பாளர் செங்கோட்டையன் 16 ஆயிரத்து 620 ஒட்டு வித்தியாசத்திலும்

ஈரோடுகிழக்குதொகுதி வேட்பாளர் விஜய் பாலாஜி 23966 ஒட்டு வித்தியாசத்திலும் ஈரோடு மேற்கு தொகுதி வேட்பாளர் ஆனந்த் மோகன் 21 ஆயிரத்து 250 ஒட்டு வித்தியாசத்திலும் பவானி சாகர் வேட்பாளர் தமிழ் செல்வி 5 ஆயிரத்து 500 ஒட்டு வித்தியாசத்திலும் மொடக்குறிச்சி வேட்பாளர்சண்முகம்2430வாக்கு வித்தியாசத்திலும்வெற்றி பெற்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் 5 தொகுதிகளில் தவெக வெற்றி பெற்றதால் அக் கட்சியினர் உற்சாகம் அடைந்தனர்.

இதனால் ஆண்கள் மட்டும் அல்லாமல் பெண்கள் ,சிறுவர், சிறுமிகளும் மாவட்டம் முழுவதும் வயது வித்தியாசம் இல்லாமல் விசில் ஊதியபடி வாண வேடிக்கைகள் வெடித்து உற்சாகமாக கொண்டாடினர்.



தேனி மாவட்டம்

199. பெரியகுளம் (தனி) சட்டமன்றத் தொகுதி

த. வெ. க வேட்பாளர்

க. சபரிஜங்கரன் – 85,656 வாக்குகள்

வி. சி. க வேட்பாளர்

பி. சக்திவேல் – 66,335 வாக்குகள்

வாக்கு வித்தியாசம்: 19,321

க. சபரிஜங்கரன் வெற்றி பெற்றார்

# அகில இந்திய தமிழர் கழகம் முத்துக்குமாரின் தேர்தல் ஆருடம் பலித்தது



நாகர்கோவில்: மே 6

தமிழக அரசியலில் பெரும் சரித்திர மாற்ற நிகழ்வு நடந்தேறியுள்ளது. புரட்சி மாற்றமாக விஜய் தமிழகத்தில் புதிய அவதாரம் எடுத்தாலும் கூட, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தொகுதியை கூட தவெக கை பற்றவில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்தில் மொத்தம் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளில், ஐந்து தொகுதிகளில் திமுக கூட்டணியும், ஒரு தொகுதியில் அதிமுகவும் வெற்றி பெற்றுள்ளது. இங்குள்ள ஆறு சட்ட மன்றத் தொகுதிகளையும் திமுக கூட்டணியே கை பற்றும் என்றும், கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி மட்டும் திமுகவுக்கு இழுபறியாக இருக்கும் என்றும், முன்பே அகில இந்திய தமிழர் கழகத்தின் தலைவர் முத்துக்குமார் கூறியிருந்தார். அச் செய்தி தினதமிழ் நாளிதழில் வெளியாகியிருந்தது. அது போலவே தேர்தல் முடிவுகளும் அமைந்துள்ளன. இது குறித்து அகில இந்திய தமிழர் கழகத்தின் நிறுவனர் முத்துக்குமார் கூறுகையில்," தேர்தல் முடிவுகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் திமுக கூட்டணிக்கு சாதமாகவே அமையும் என்பது முன்பே எதிர் பார்த்தது தான். அது போன்றே நாகர்கோவில், பத்மனாபபுரம், குளச்சல், விளவங்கோடு, கிள்ளியூர் ஆகிய தொகுதிகளில் திமுக கூட்டணியே வெற்றி பெற்றுள்ளது. கன்னியாகுமரி தொகுதியை பொறுத்தமட்டில் திமுகவுக்கு இழுபறியாக இருக்கும் என்று தான்கூறியிருந்தேன். அது போலவே கன்னியாகுமரி தொகுதியில்நூலிழையில் தான் அதிமுக வெற்றி பெற்றுள்ளது." இவ்வாறு முத்துக்குமார் கூறியுள்ளார். நாகர்கோவில் தொகுதியில் திமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ள ஆஸ்டினுக்கு அகில இந்திய தமிழர் கழகத்தின் சார்பில் ஆதரவு அளித்து செயல்பட்டது குறிப்பிடத்தக்கது.



தேனி மாவட்டம் – கம்பம் சட்டமன்ற தொகுதி

தேர்தல் முடிவு

த. வெ. க வேட்பாளர்

பி. எல். ஏ. ஜெகநாத்மிஸ்ரா – 85,394 வாக்குகள்

தி. மு. க வேட்பாளர்

இ. ராமகிருஷ்ணன் – 84,643 வாக்குகள்

வாக்கு வித்தியாசம் – 751

வெற்றி பெற்றவர்

பி. எல். ஏ. ஜெகநாத்மிஸ்ரா (த. வெ. க)

### விளாத்திகுளத்தில்

# பாஜகவினர் இனிப்பு வழங்கி கொண்டாட்டம்



விளாத்திகுளம் மே 06.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் பேருந்து நிலையம் முன்பு நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மேற்குவங்காளம், அஸ்ஸாம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களில் பாரதிய ஜனதா கட்சி பெரும்பான்மையோடு வெற்றி பெற்று ஆட்சி அமைக்கிறது. அந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக விளாத்திகுளம் வடக்கு மண்டல் சார்பாக பாரதிய ஜனதா கட்சி சார்பாக மாவட்டத் தலைவர் சரவணகிருஷ்ணன் தலைமையிலும், ஒன்றிய தலைவர் திரு ஆர்.காட்டு ராஜா முன்னிலையில் பட்டாசு வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பாரதிய ஜனதா கட்சி மாவட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தேனி மாவட்டம்

போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி

தி.மு.க. வேட்பாளர்

ஓ. பன்னீர் செல்வம் – 85,206 வாக்குகள்

த. வெ. க. வேட்பாளர்

எஸ். பிரகாஷ் – 78,401 வாக்குகள்

(விசில் சின்னம்)

வாக்கு வித்தியாசம்: 6,802

வெற்றி பெற்றவர்

ஓ. பன்னீர் செல்வம் (தி.மு.க.)

### தென்காசி மாவட்டத்தில்

# ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் நான்கு சட்டமன்ற தொகுதிகளில் திமுகவும் ஒரு சட்டமன்ற தொகுதியில் அதிமுகவும் வெற்றி



தென்காசி.மே.6

தென்காசி மாவட்டத்தில் ஐந்து சட்டமன்ற தொகுதிகளில் நான்கு சட்டமன்ற தொகுதிகளில் திமுகவும் ஒரு சட்டமன்ற தொகுதியில் அதிமுகவும் வெற்றி பெற்றுள்ளன இதில் தென்காசி ,ஆலங்குளம் ,வாசுதேவநல்லூர் ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் நேரடியாக திமுக வேட்பாளர்கள் வெற்றி பெற்றுள்ளனர் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் திமுக கூட்டணியில் மதிமுக வேட்பாளர் உதயசூரியன் சின்னத்தில்நின்று வெற்றி பெற்றுள்ளார் தென்காசி மாவட்டத்தில் சங்கரன் கோவில் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் அதிமுக வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். குறிப்பாக தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்ட திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன்

தன்னை எதிர்த்து போட்டியிட்ட அதிமுக வேட்பாளர் செல்வ மோகன் தாஸ் பாண்டியனை விட 9865 வாக்குகள் அதிகமாக பெற்று வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

தென்காசி தொகுதியில் வெற்றி பெற்ற திமுக வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் தென்காசி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரிடம் இருந்து வெற்றி பெற்ற சான்றிதழை பெற்றுக் கொண்டார் உடன் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன், முன்னாள் தெற்கு மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் ஆகியோர் இருந்தனர்.



தேனி மாவட்டம்

ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி

தி.மு.க. வேட்பாளர்

ஏ. மகாராஜன் – 74,324 வாக்குகள்

அதிமுக வேட்பாளர்

ஏ. லோகிராஜன் – 63,343 வாக்குகள்

வாக்கு வித்தியாசம் 10,981

வெற்றி பெற்றவர்: தி.மு.க. வேட்பாளர் ஏ. மகாராஜன்

# 2026 நிதியாண்டில் ₹1,506 கோடி லாபமீட்டிய பிராமல் ஃபைனான்ஸ்



சென்னை, மே 6,

பிராமல் ஃபைனான்ஸ், 2026 நிதியாண்டில் வரிக்குப் பிந்தைய லாபம், கடந்த ஆண்டை விட 210% அதிகரித்து, ₹1,506 கோடியாக உயர்ந்திருக்கிறது. மார்ச் மாதத்தில் முடிவடைந்த காலாண்டில் லாபம் ரூ.502 கோடியாக மிகப்பெரிய வளர்ச்சியைக் கண்டிருக்கிறது. இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தை விட 390 சதவீதம் அதிகமாகும்.

இந்த ஆண்டில் இந்நிறுவனத்தால் நிர்வகிக்கப்படும் சொத்துக்களின் மதிப்பு 25% உயர்ந்து ரூ.1,01,230 கோடியை எட்டியிருப்பது ஒரு முக்கிய மைல்கல்லாக கருதப்படுகிறது. இந்த வளர்ச்சிக்கு மொத்த 85 சதவீத பங்களிப்பை வழங்கிய சில்லறை வர்த்தகமே முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், பெரும்பாலும் கிராமப்புறங்களை மையமாகக் கொண்டு 170 புதிய கிளைகள் திறக்கதிட்டமிட்டுள்ளது.

சிறப்பான செயல்பாடு குறித்து நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி ஜெயராம் ஸ்ரீதரன் கூறுகையில், 2026 நிதியாண்டு பிராமல் ஃபைனான்ஸ் நிறுவனத்திற்கு ஒரு திருப்புமுனையாக இருந்திருக்கிறது. வலுவான வளர்ச்சி, சில்லறை (ரீடெய்ல்) வர்த்தகப் பிரிவில் அதிக கவனம் மற்றும் ஆழமான தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு ஆகியவை இதில் அடங்கும். நாடு முழுவதும் எமது சேவைகள் விரிவடையும் போது, வாடிக்கையாளர் அனுபவம், கடன் மதிப்பீடு, வசூல் மற்றும் ஒட்டு மொத்த உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் செயற்கை நுண்ணறிவு (AI) தொடர்ந்து முக்கிய பங்கு வகிக்கும் என்றார்.

### காலத்தில் கல்லீரல் ஆரோக்கியம்:

# ஒவ்வொரு கர்ப்பிணித் தாயும் தெரிந்து கொள்ள வேண்டியவை



சென்னை, மே 6,

கர்ப்ப காலத்தில் கல்லீரல் தொடர்பான சில பாதிப்புகள் ஆரம்பத்தில் எந்த அறிகுறியும் இல்லாமல் தொடங்கி, கவனிக்கப்படாவிட்டால் விரைவாக மோசமடையக்கூடும் .

இது குறித்து சென்னை ஆர்.ஜி. மருத்துவமனைகள், மகப்பேறு மருத்துவ ஆலோசகர் ஜானவி சந்திரசேகர் கூறியதாவது: கர்ப்பம் ஒரு பெண்ணின் உடலில் பல மாற்றங்களைக் கொண்டுவருகிறது, பெரும்பாலான கர்ப்பிணித்தாய்மார்கள் ஊட்டச்சத்து, குழந்தையின் வளர்ச்சி மற்றும் வழக்கமான பரிசோதனைகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகையிலும் கல்லீரல் ஆரோக்கியம் பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகிறது. கர்ப்ப காலத்தில் கல்லீரல் தொடர்பான சில பாதிப்புகள் ஆரம்பத்தில் எந்த அறிகுறியும் இல்லாமல் தொடங்கி, கவனிக்கப்படாவிட்டால் விரைவாக மோசமடையக்கூடும்.

செரிமானம், வளர்சிதை மாற்றம், ஹார்மோன் செயலாக்கம் மற்றும் கழிவுகளை அகற்றுதல் ஆகியவற்றில் கல்லீரல் முக்கிய பங்கு வகிக்கிறது. கர்ப்ப காலத்தில், உடல் கடினமாக உழைக்கிறது, மேலும் ஒட்டுமொத்த சமநிலையைப் பராமரிக்க உதவுவதன் மூலம் கல்லீரல் தாய் மற்றும் குழந்தை இருவருக்கும் ஆதரவளிக்கிறது.

கர்ப காலத்தில் ஏற்படும் கல்லீரலுக்குள் ஏற்படும் பித்தநீர் தேக்கம் பாதிப்பின் அறிகுறியாக உள்ளங்கைகள் மற்றும் உள்ளங்கால்களில் கடுமையான அரிப்பை ஏற்படுத்தி உயர் இரத்த அழுத்தம் உண்டாகி கல்லீரல் செயல்பாட்டைப் பாதிக்கக்கூடும்.

இதனால் கல்லீரல் நொதி மாற்றங்கள், குறைந்த இரத்தத் தட்டு எண்ணிக்கை மற்றும் இரத்தச் சிவப்பணுக்கள் சிதைவு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கடுமையான சிக்கலாகும்.

இதற்கான அவசர மருத்துவ கவனிப்பு, சிகிச்சையை எடுத்துக் கொள்வது கர்பிணித்தாய்க்கும், வயிற்றில் வளரும் சேயுக்கும் நல்லது என்றார்.



### வாக்கு எண்ணிக்கை நிறைவு

# கலெக்டர் அலுவலகத்திற்கு கொண்டுவரப்பட்ட மின்னணு இயந்திரங்கள் பூட்டி சீல் வைப்பு

நாகர்கோவில், மே.6

குமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி, நாகர் கோவில், குளச்சல், விளவங்கோடு, கிள்ளியூர், பத்மநாபபுரம் போன்ற 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற்றது. வாக்குப்பதிவு முடிந்து அனைத்து வாக்கு பதிவு இயந்திரங்களும் கோணம் அரசு பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கைக்காக தனித்தனியாக அறைகளில் வைக்கப்பட்டு சீல் வைக்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் வாக்கு எண்ணிக்கை நள்ளிரவு வரை நடைபெற்றது. முடிவுகள் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து, பயன்படுத்தப்பட்ட மற்றும் அனைத்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் விவிபேட் கருவிகளை மீண்டும் பாதுகாப்பாக வைக்கும் பணிகளை அதிகாரிகள் தொடங்கினர்.

இதற்காக வாக்கு எண்ணிக்கை மையமான கோணம் பொறியியல் கல்லூரியில் இருந்து இயந்திரங்கள் அனைத்தும் நாகர்கோவில் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர பாதுகாப்பு மையத்திற்கு கொண்டு செல்ல தேர்தல் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர்.

6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தனி தனியாக 6 லாரிகள்வரவழைக்கப்பட்டன.

பின்னர் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் தேர்தல் அலுவலர்கள் முன்னிலையில் இயந்திரங்கள் லாரியில் ஏற்றப்பட்டு, கோணத்தில் இருந்து கலெக்டர் அலுவலகம் வரை கொண்டு சென்று இயந்திர பாதுகாப்பு அறையில் தொகுதி வாரியாக தனித்தனியாக அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த பணிகளை மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான அழகு மீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதை அடுத்து அறைகள் பூட்டப்பட்டு சீல் வைக்கப்பட்டு, 24 மணி நேரமும் ஆயுதம் ஏந்திய போலீஸ் பாதுகாப்பு மற்றும் சிசிடிவி கேமரா கண்காணிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.




## கே.எம்.சி.எச் மருத்துவமனையில்

# கை சுகாதாரம் மற்றும் கை கழுவுதல் அவசியம் குறித்து விழிப்புணர்வு

கோவை மே:06

உலக கை சுகாதார தினத்தை முன்னிட்டு கோவை சக்தி சாலை கோவில்பாளையம் பகுதியிலுள்ள கே.எம்.சி.எச் மருத்துவமனை வளாகத்தில் கே.எம்.சி.எச். மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் டாக்டர். நல்லா.க.பழனிசாமி தலைமையில் கைகளை சுத்தமாக வைத்திருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், சோப்புடன் கை கழுவுவதன் அவசியத்தை பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பெரிய ஒரு பலகையில் கையெழுத்திட்டு அவரது கடமையை செய்தார். மேலும் இதன் முக்கியத்துவம் குறித்து நோய்த்தடுப்பு, தொற்று நோய்கள் மற்றும் கிருமி பரவுவதைத் தடுப்பதற்காக கைகளை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் உயிரைக் காப்பதாகும், நோய்களைத் தவிர்க்க கைகளை சோப்பு மற்றும் நீர் கொண்டு தவறாமல் கழுவ வேண்டும் என்பதே இந்நிகழ்வின் நோக்கமாகும். இதில் உடன்ப அரவிந்தன் நர்சிங் ஹோம் டாக்டர். சாமிநாதன், மெடிக்கல் டைரக்டர் டாக்டர். விமல்குமார், சீனியர் வைஸ் பிரசிடெண்ட் டாக்டர். ரஞ்சித், ஜெனரல் மேனேஜர் சோமசுந்தரம், அட்வைசர் தினமணி , உதவி ஆய்வாளர் ஞானசேகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



## திமுக கோட்டையாக இருந்ததை மாற்றி

# முதல் தேர்தலிலேயே தஞ்சாவூர் தொகுதியை வசப்படுத்தி த.வெ.க

தஞ்சாவூர். மே. 6

திமுக கோட்டையாக விளங்கிய தஞ்சாவூர் தொகுதியில் சந்தித்த முதல் தேர்தலிலேயே த.வெ.க வெற்றி பெற்றது.

தஞ்சாவூர் சட்டசபைத் தொகுதியை 1952 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப் பட்டது. இதுவரை 18 முறை தேர்த லை சந்தித்துள்ள இத்தொகுதியில் திமுக 10 முறையும், காங்கிரஸ்5 முறையும், அதிமுக 3 முறையும் வெற்றி பெற்றுள்ளது

தஞ்சாவூர் தொகுதியை பொறுத்தவரையில் திமுக கோட் டை என்பார்கள் .இந்த தொகுதியில் 1962 ஆம் ஆண்டு திமுக தலைவராக இருந்த கலைஞர் கருணாநிதி போட்டியிட்டு வெற்றி பெற்றார். அப்படிப்பட்ட திமுக கோட்டையான தஞ்சாவூர் தொகு தியில் சந்தித்த முதல் தேர்தலிலே யே தமிழக வெற்றிகழகம் வெற்றி பெற்று, தஞ்சாவூர் தொகுதியை வசப்படுத்தி உள்ளது. தஞ்சாவூர் தொகுதியில் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதல் இறுதி வரைத. வே. க. வேட்பாளர் முன்னிலை யில் இருந்து வந்தார்.

அவருக்கு அடுத்த இடத்தை திமுக வேட்பாளர் சண்.ராமநாதன் இரண்டாவது இடத்தை அதிமுக கூட்டணி சார்பில் போட்டியிட்ட பா ஜனதா வேட்பாளர் கருப்பு முருகானந்தமும் பிடித்தனர் தஞ்சாவூர் சட்ட மன்ற தொகுதி யில் தமிழகவெற்றிகழகம்சார்பில் போட்டியிட்ட விஜய் சரவணன் 86,599 ஓட்டுகள் பெற்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தலைமையிலா ன தேசிய ஜனநாயக கூட்டணியின் பாரதீய ஜனதா கட்சி வேட்பாளர் கருப்பு முருகானந்தத்தை சுமார் 60 300 ஓட்டுக்கள் வித்தியாசத்திலும், மதசார்பற்ற ஜனநாயக கூட்டணி தலைமையிலான திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் போட்டியிட்ட சண். ராமநாதனை சுமார் 16,955 ஓட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

மாவட்ட தேர்தல் அலுவலர் பா.பிரியங்கா பங்கஜம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், தஞ்சாவூர் வட்டாட்சியர் சிவகுமார் ஆகியோர் முன்னி லையில் தேர்தல் நடத்தும் அலுவலர் நித்யா விடமிரு ந்து வெற்றி பெற்றதற்கான சான்றிதழை விஜய் சரவணன் பெற்றுக் கொண்டார்.



# படகு விபத்தில் இறந்த மேலும் 2 பேரின் உடல்கள் திருச்சி வந்தது

திருச்சி, மே. 6

மத்திய பிரதேச மாநிலம் ஜபல்பூர் மாவட்டத்தில் உள்ள பர்கி அணையில் சுற்றுலா பயணிகள் சென்ற படகு கவிழ்ந்த விபத்தில், திருச்சி நவல்பட்டு பகுதியை சேர்ந்த 5 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

இந்த துயர சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. உயிரிழந்த கார் குழலி, சவுபாக்கியம் ஆகியோரின் உடல்கள் மீட்கப்பட்டு திருச்சிக்கு கொண்டு வரப்பட்டன. மேலும், காம ராஜ், மயூரன் ஆகியோரின் உடல்களும் மீட்கப்பட்டு விமானம் மூலம் திருச்சிக்கு கொண்டுவரப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

## குமரி மாவட்டத்தில்

# டெபாசிட் இழந்த 67 வேட்பாளர்கள்

நாகர்கோவில், மே. 6

கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் கன்னியாகுமரி மற்றும் விளவங்கோடு தொகுதிகளில் தலா 14 பேரும், கிள்ளியூர் மற்றும் குளச்சல் தொகுதியில் தலா 13 பேரும், பத்மநாபபுரம் தொகுதியில் 11 பேரும், நாகர்கோவில் தொகுதியில் 20 பேர் என மொத்தம் 85 வேட்பாளர்கள் 6 தொகுதிகளிலும் போட்டியிட்டனர்.

இவர்கள் அனைவரும் தங்கள் வேட்பு மனுவுடன் போட்டிக்கான கட்டணம்தொகையும்செலுத்தி இருந்தனர். இந்த பணம் அவர்கள் வாங்கும் வாக்குகளை பொறுத்து திரும்ப அளிக்கப்படுவது வழக்கம். அதாவது தொகுதியில் பதிவான வாக்குகளில் 6ல் 1பங்கு வாக்குகள் பெற்றிருந்தால் மட்டுமே அவர்கள் கட்டிய டெபாசிட் தொகை திருப்பி வழங்கப்படும்.

இந்த வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் வாக்கு எண்ணிக்கையில் அதிமுக, திமுக, காங்கிரஸ்,

பாஜக மற்றும் தமிழக வெற்றிக்கழக வேட்பாளர்கள் கணிசமான வாக்குகளை பெற்றனர். இதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மட்டுமே டெபாசிட் தொகைகள் பெற்றன. மற்ற வேட்பாளர்கள் அனைவரும் டெபாசிட் இழந்தனர். நாம் தமிழர் கட்சி சார்பில் குமரி மாவட்டத்தில் போட்டியிட்ட 6 வேட்பாளர்கள் டெபாசிட் இழந்துள்ளனர். இவர்களுடன் சுயேட்சை வேட்பாளர்களும் டெபாசிட் இழந்துள்ளனர்.

கன்னியாகுமரி தொகுதியில் போட்டியிட்ட 16 வேட்பாளர்களில் திமுக மற்றும் தவெக வேட்பாளர்களை தவிர மீதமுள்ள 18 பேரும் டெபாசிட் இழந்தனர். நாகர்கோவில் தொகுதியிலும் தவெக மற்றும் பாஜக வேட்பாளர்களை தவிர்த்து 17 பேர் டெபாசிட் இழந்துள்ளனர். குளச்சல் தொகுதியில் 10 பேர் டெபாசிட் இழந்துள்ளனர்.

பத்மநாதபுரம் தொகுதியில் 8 பேர் டெபாசிட் இழந்தனர். விளவங்கோடு தொகுதியில் 11 பேர் டெபாசிட் இழந்துள்ளனர். கிள்ளியூர் தொகுதியில் 10 பேர் டெபாசிட் இழந்தனர். மொத்தத்தில் மாவட்டம் முழுவதும் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளிலும் 67 வேட்பாளர்கள் டெபாசிட் இழந்துள்ளனர்.

# நாமக்கல் மாவட்டம் 5தொகுதிகளில் த.வெ.க. ஒரு தொகுதியில் அதிமுக 308 வாக்குகள் வித்தியாசத்திலும் வெற்றி

நாமக்கல்.மே.6.

தமிழக சட்டமன்ற தேர்தல் 2026 வாக்குப்பதிவு ஏப்ரல் 23 தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று முடிந்தது. நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளில் பதிவான வாக்கு இயந்திரங்கள் நாமக்கல் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான துர்கா தேவி மற்றும் அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு இளையாம்பாளையத்தில் உள்ள விவேகானந்தா மகளிர் கல்லூரியில் உள்ள தனி அறையில் சீல் வைக்கப்பட்டு பாதுகாப்புடன் வைக்கப்பட்டன .

பின்னர் மே நான்காம் தேதி பாதுகாப்புடன் திறக்கப்பட்டு ஆறு தொகுதிகளின் வாக்குகள் தனித்தனி அறையில் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன . இதில் ஆறு சட்டமன்ற தொகுதிகளில் 5 தொகுதிகளில் தமிழக வெற்றிக்கழகமும் ஒரு தொகுதியில் அதிமுக 308 வாக்குகள் வித்தியாசத்திலும் வெற்றி பெற்றது.

அதன் விபரம் வருமாறு ராசிபுரம் (தனி )தொகுதி தொகுதியில் பா.ஜ.க வேட்பாளர் எஸ்.டி பிரேம்குமாரை விட த.வெ. க வேட்பாளர் தமிழ்ச்செல்வன் 14511 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது .

நாமக்கல் ( பொது ) தொகுதி இத்தொகுதியில் அ.தி.மு.க.வேட்பாளர் ஸ்ரீதேவி பி. எஸ்.மோகனை விட த.வெ.க. வேட்பாளர் சி.எஸ். திலீப் 11008 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றதாக தேர்தல் அலுவலர் அதிகாரப்பூர்வமாக தெரிவித்தார். பரமத்தி வேலூர் (பொது) தொகுதி இத்தொகையில் திமுக வேட்பாளர் கே. எஸ். மூர்த்தியை விட அ.தி.மு.க. வேட்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ.

எஸ்.சேகர் 308 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றதாக தொகுதி தேர்தல் அலுவலர் அதிகாரப்பூர்வமா அறிவித்து அதற்கான அறிவிப்பை வெளியிட்டார். திருச்செங்கோடு ( பொது ) தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் வேட்பாளர் ஆர். சந்திரசேகரை விட த.வெ.க.வேட்பாளர் அருண்ராஜ் 28,031 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றதாக தேர்தல் அலுவலர் அறிவித்தார். குமாரபாளையம் ( பொது) தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளரும் முன்னாள் அமைச்சருமான பி. தங்கமணியை விட த.வெ.க.பெண் வேட்பாளர் சி. விஜயலட்சுமி 7696 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றதாக தேர்தல் அலுவலர் அதிகாரப்பூர்வமாக தெரிவித்தார். சேந்தமங்கலம் (மலைவாழ் மக்கள்) தொகுதி இத்தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் முன்னாள் எம்.எல்.ஏ. சி. சந்திரசேகனை விட த.வெ.க. வேட்பாளர் பி. சந்திரசேகர் 2655 வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றதாக தேர்தல் அலுவலர் அதிகாரப்பூர்வமாக தெரிவித்துள்ளார் . கடந்த 2011 தமிழக சட்டமன்றத் தேர்தலில் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஆறு தொகுதிகளில் இரண்டு தொகுதி அதிமுகவும் நான்கு தொகுதிகளில் திமுகவும் வெற்றி பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## குமரி மாவட்டத்தில்

# போட்டியிட்ட 5 தொகுதிகளிலும் 3ம் இடத்திற்கு சென்ற பாஜக

நாகர்கோவில், மே. 6

கன்னியாகுமரி மாவட்டம் தேசிய கட்சிகள் ஆதிக்கம்நிறைந்த மாவட்டம் ஆகும். தேசிய கட்சிகளை சேர்ந்த வேட்பாளர்கள் அதிக அளவில் வெற்றி பெறுவது வழக்கம். இந்த நிலையில் நடந்து முடிந்த தேர்தலில் மாவட்டத்தின் பாரம்பரியமான செல்வாக்கு மிக்க தொகுதிகளிலும், நட்சத்திர வேட்பாளர்கள் களமிறங்கிய தொகுதிகளிலும் பாரதிய ஜனதா கட்சி சார்பில் வேட்பாளர்கள் களமிறங்கி, 3வது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக நாகர்கோவில் தொகுதியில் கடந்த முறை பாரதிய ஜனதா கட்சி சார்பில் எம் ஆர்காந்தி வெற்றி பெற்று எம்எல்ஏ ஆனார். இந்த முறை எம் ஆர் காந்தி திமுக வேட்பாளர் ஆஸ்டின் என்பவரிடம் வெற்றியை பறி கொடுத்தது மட்டுமின்றி, 52,350 வாக்குகளை மட்டுமே பெற்று 3வது இடத்திற்கு தள்ளப்பட்டு தோல்வியை தழுவினார். ஆனால் அங்கு 2 வது இடத்தை தமிழக வெற்றிக்கழகம் பிடித்து பிடித்துள்ளது. இதுபோன்று விளவங்கோடு தொகுதி காங்கிரஸ் எம்எல்ஏவாக இருந்து கட்சியிலிருந்து விலகி பாரதிய ஜனதா கட்சியில் இணைந்தவர் விஜயதரணி. இவர் இந்த தேர்தலில் அதே தொகுதியில் பெரும் எதிர்பார்ப்புகளுக்கு இடையே பாரதிய ஜனதா வேட்பாளராக களம் இறங்கினார். ஆனால் அங்கும் காங்கிரஸ் புதுமுக வேட்பாளர் பிரவீன் என்பவர் முதல் இடத்தை பிடிக்க, தமிழக வெற்றி கழகத்தின் மைக்கேல் குமார் இரண்டாவது இடத்தை பிடித்து, விஜயதரணி 45 ஆயிரத்து 64 வாக்குகளுடன் 3வது இடத்திற்கு தள்ளப்பட்டது பாரதிய ஜனதா கட்சிக்கு மிகப்பெரிய பின்னடைவாக கருதப்படுகிறது. இது போன்று பத்மநாதபுரம் தொகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் செல்லசாமி வெற்றி பெற்ற நிலையில் அங்கும் இரண்டாவது இடத்தை தமிழக வெற்றி கழகம் பிடித்து, பாரதிய ஜனதா வேட்பாளர் ரமேஷ் 44 ஆயிரத்து 293 வாக்குகளுடன் மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளார். மேலும் கிள்ளியூர், குளச்சல் தொகுதிகளிலும் காங்கிரஸ் மற்றும் தமிழக வெற்றிக் கழகத்திற்கு பின்னாலே பின்னால் பாரதிய ஜனதா கட்சி மூன்றாம் இடத்தில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. குளச்சலில் பாரதிய ஜனதா கட்சியின் சிவகுமார் 54ஆயிரத்து 384 வாக்குகளும், கிள்ளியூரில் பாரதிய ஜனதா கூட்டணி கட்சியான தமிழ் மாநில காங்கிரஸ் வேட்பாளர் நிவின் சைமன் 31 ஆயிரத்து 70 வாக்களும் பெற்று மூன்றாம் இடத்தை பிடித்துள்ளனர்.

குமரி மாவட்டத்தின் பெரும்பாலான தொகுதிகளில் பாரதிய ஜனதா கட்சி இரண்டாவது இடத்தை கூட தக்க வைக்க முடியாமல் புதிதாக களம் கண்ட தமிழக வெற்றி கழகத்திடம் அந்த இடத்தை பறிகொடுத்து மூன்றாவது இடத்தில் இருப்பது தமிழக அரசியல் களத்தில் பெரும் விவாதத்தை ஏற்படுத்தி உள்ளது. மாவட்டத்தின் ஒட்டுமொத்தமாக பாரதிய ஜனதா கட்சி மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டு இருப்பது அக்கட்சியினரிடம் ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.



தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் கே .பி. அன்பழகன் 23 வது சுற்றுமுடிவில் 37,402 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

## திருச்சி

# வீட்டின் கழிவறையில் விழுந்த மூதாட்டி சாவு

திருச்சி, மே. 6

திருச்சி உறையூர் பகுதியைச் சேர்ந்த 82 வயதான சுசிலா, வீட்டில் கழிவறைக்குச் சென்றபோது நிலைதடுமாறி கீழே விழுந்தார். குடும்பத்தினர் அவரை மீட்டு திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி சுசிலா பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து உறையூர் போலீசார் வழக்குப்பதிவு செய்துவிசாரணை நடத்தி வருகின்றனர்

## திருச்சி அம்மாமண்டபம் அருகில்

# அடையாளம் தெரியாத ஆண் பிணம்

திருச்சி, மே. 6

திருச்சி அம்மாமண்டபம் காவிரியாறு அருகே 45 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவர் இறந்து கிடந்த நிலையில், திம்மராயசமுத்திரம் கிராம நிர்வாக அதிகாரி குமார் ஸ்ரீரங்கம் போலீசில் புகார் அளித்தார். சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்தவர் யார், எந்த ஊரை சேர்ந்தவர் என்பது குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்

## காங்கயம் தொகுதியில்

# முன்னாள் செய்தித் துறை அமைச்சர் மூன்றாமிடம்!!



திருப்பூர், மே 6

தமிழகம் முழுதும் த.வெ.க. வீசிய அலையால், அமைச்சர் பலர் தோல்வியை சந்தித்தனர். காங்கயம் தொகுதியில் போட்டி யிட்ட செய்தித் துறை அமைச்சர் மூன்றாமி டத்துக்கு தள்ளப்பட்டார்.

திருப்பூர் மாவட்டம், காங்கயம் தொகுதி அமைச்சர் தொகுதி என்பதால், வி.ஐ.பி தொகுதியாக கருதப் பட்டது.

இத்தொகுதியில் அ.தி. மு.க. வேட்பாளராக முன்னாள் எம்.எல்.ஏ. நடராஜ் போட்டியிட்ட நிலையில், சிட்டிங் அமைச்சர் சாமிநாதனுக்கு மீண்டும் சீட் வழங்கியது.

நடந்த தி.மு .க ஓட்டு எண்ணிக்கையில், வேட்பாளர் நடராஜ், 70 ஆயிரத்து, 753 ஓட்டுக்கள் வெற்றி பெற்றார்.

த.வெ.க. வேட்பாளர் மணிக்கவுண்டர், 62 ஆயிரத்து, 815 ஓட்டுக்களை பெற்று, இரண்டாமிடம் பிடித்தார்.

சிட்டிங் தொகுதியில் போட்டியிட்ட அமைச்சர் சாமிநாதன், 58 ஆயிரத்து, 931 ஓட்டுக்களை பெற்று மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டார்.

முதலிடம் பெற்ற அ.தி.மு.க. வேட்பாளரை விட, 6,983 ஓட்டுக்கள் குறைவாக பெற்றதால், த.வெ.க. இரண்டாமிடம் பெற்றது.58,931 ஓட்டுக்கள் தி.மு.க. மூன்றாமிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.

'முதல் தேர்தலிலேயே சிறப்பான செயல்பாடு'

# தவெகவுக்கு தமிழக பாஜக தலைவர் பாராட்டு



சென்னை, மே. 6

'போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தியதற்கு தமிழக வெற்றிக் கழகத்துக்கு என் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்' என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், '2026 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு உறுதுணையாக இருந்து ஆதரவு வழங்கிய தமிழக மக்களுக்கும், கூட்டணியின் வெற்றிக்காக அயராது பாடுபட்ட அனைத்து தோழமைக் கட்சி தொண்டர்களுக்கும், மேலும் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட நம் தமிழக பாஜகவின் அனைத்து காரியக்கர்த்தாக்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த தேர்தலில், வரலாறு காணாத அளவில் இளைஞர்கள், பெண்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் உற்சாகத்துடன் தன்னார்வமாக வந்து வாக்களித்து, ஜனநாயகத்தின் மீதான தங்கள் உறுதியான நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளனர். இதற்காக அவர்களுக்கு என் இதயம் கனிந்த பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தாங்கள் போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே சிறப்பான செயல்பாட்டை வெளிப்படுத்தியதற்கு தமிழக வெற்றிக் கழகத்துக்கு என் பாராட்டுக்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்' எனத் தெரிவித்துள்ளார்.

# "தம்பி விஜய் தலைமையிலான தவெக அரசுக்கு வாழ்த்துகள்" சீமான்



சென்னை, மே. 6

"பொறுப்பேற்கவுள்ள தம்பி விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக புதிய அரசுக்கு என்னுடைய வாழ்த்துகள்" என நாதக தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்ட பதிவில் "அண்மையில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைப் பொதுத் தேர்தலில் நாம் தமிழர் கட்சிக்கு வாக்களித்த தாய்த்தமிழ் உறவுகள் அனைவருக்கும் என்னுடைய உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெற்றிபெற்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பொறுப்பேற்கவுள்ள தம்பி விஜய் தலைமையிலான தமிழக வெற்றிக் கழக புதிய அரசுக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

தமிழர்களின் வரலாற்றுத் தாயகமான தமிழ்நாடு எனும் தாய்நிலத்தின் நலனுக்காகவும், உயர்வுக்காகவும் தொடர்ச்சியாகக் களப்பணியாற்றுவோம்.

மண்ணுக்கும், மக்களுக்குமான ஆக்கப்பூர்வ மாற்று அரசியலை பொறுப்புள்ள எதிர்க்கட்சியாய் நின்று நாம் தமிழர் கட்சி செயலாற்றும்" என்று அவர் பதிவிட்டுள்ளார்.

# "ஒரு ரூபாய் கூட வழங்காமல் தவெக சரித்திர வெற்றி"

## செங்கோட்டையன் பெருமிதம்



கோவை, மே. 6

"வாக்காளர்களுக்கு ஒரு ரூபாய் கூட கொடுக்காமல் சரித்திர வெற்றியை தவெக பெற்றுள்ளது" என்று செங்கோட்டையன் பெருமிதமாக தெரிவித்தார்.

தமிழக வெற்றிக் கழக எம்எல்ஏக்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மேற்கு மண்டலத்தை சேர்ந்த எம்எல்ஏக்கள் பலர் கோவையில் இருந்து சென்னைக்கு புறப்பட்டனர். பீளமேடு விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கோபி தொகுதி எம்எல்ஏ செங்கோட்டையன் கூறியது: "ஓர் இயக்கம் வளர வேண்டும் என்றால் தியாகம் செய்ய வேண்டும். அண்ணா, எம்ஜிஆர், ஜெயலலிதா தியாகத்தால் வளர்ந்த இயக்கம் தற்போது தடுமாறிக் கொண்டிருக்கிறது.

மக்கள் சக்தியாக தற்போது தவெக மாறியிருக்கிறது. வாக்காளர்களுக்கு ஒரு ரூபாய் கூட வழங்காமல் முதல் தேர்தலில் சரித்திர வெற்றி பெற்றுள்ளோம். விஜய்யை மக்கள் நேசிக்கிறார்கள். நேசிக்கின்ற மக்களுக்கு அவர் உறுதுணையாக இருப்பார். உறுதியாக உயரிய பார்வை, மனிதநேயம் அவரிடத்தில் இருக்கிறது. அதனை நீங்கள் பார்ப்பீர்கள்" என்று கூறினார்.



தூத்துக்குடி மாவட்டத்தில்

# திமுக, தவெக 2 கட்சி சம பலம் தலா 3 தொகுதிகளில் வெற்றி

தூத்துக்குடி, மே. 6

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 தொகுதிகளில் திமுக மற்றும் தவெக தலா 3 இடங்களில் வெற்றி பெற்றுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளில் திமுக மற்றும் முதன்முறையாகத் தேர்தலைச் சந்தித்த தமிழக வெற்றிக் கழகம் ஆகிய இரு கட்சிகளும் தலா 3 தொகுதிகளில் வெற்றி பெற்று சமபலத்துடன் உள்ளன.

அதிர்ச்சித் தோல்விகள்: வெற்றி பெறுவார்கள் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட திமுகவின் முக்கியத் தலைவரான பி. கீதா ஜீவன் தூத்துக்குடி தோல்வியடைந்தார். அதேபோல், அதிமுகவின் மூத்த தலைவர்களான கடம்பூர் செ. ராஜு கோவில்பட்டி மற்றும் எஸ்.பி. சண்முகநாதன் ஸ்ரீவைகுண்டம் ஆகியோரும் வெற்றி வாய்ப்பை இழந்தனர்.

புதியவர்களின் வருகை: தவெக சார்பில் முதன்முறையாகக் களம் கண்ட ஸ்ரீநாத், மதன்ராஜ் மற்றும் சரவணன் ஆகியோர் தங்களது முதல் தேர்தலிலேயே வெற்றி பெற்றுள்ளனர். மேலும், கோவில்பட்டியில் திமுக சார்பில் முதல் முறையாகப் போட்டியிட்ட கா. கருணாநிதி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

கடும் போட்டி: திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம் மற்றும் கோவில்பட்டி ஆகிய தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கையின் போது திமுக மற்றும் தவெகவினரிடையே மிகக்கடும் இழுபறி நிலவியது குறிப்பிடத்தக்கது. தொகுதி வெற்றி பெற்ற வேட்பாளர் கட்சி முன்னிலை நிலவரம் தூத்துக்குடி ஸ்ரீநாத் தவெக முதல் சுற்றில் இருந்தே முன்னிலை பெற்று வெற்றி. திருச்செந்தூர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் திமுக தொடர்ந்து 7 ஆவது முறையாக வெற்றி பெற்று சாதனை.

கோவில்பட்டி கா. கருணாநிதி கோவில்பட்டி தொகுதியில் தொடர்ந்து அதிமுக கோட்டையாக விளங்கிய இடத்தில் திமுக கட்சி சார்பில் முதல் முறையாக போட்டியிட்டு முதல் வெற்றி. விளாத்திகுளம் ஜி. வி. மார்க்கண்டேயன் திமுக கடும் போட்டிக்கு இடையே வெற்றியைத் தக்கவைத்தார். ஓட்டப்பிடாரம் மதன்ராஜ் தவெக முதன் முறையாகப் போட்டியிட்டு வெற்றி. ஸ்ரீவைகுண்டம் சரவணன் தவெக கடும் இழுபறிக்குப் பின்னே வெற்றியை பதிவு செய்தார்கள்.




திருச்சி

# குடியிருப்பு பகுதியில் 'ஹாயாக' ஓய்வெடுத்த முதலை

திருச்சி, மே. 6

திருச்சி முருங்கப்பேட்டை பகுதியில் உள்ள ஒரு தென்னந்தோப்பிற்குள் சுமார் 10 அடி நீளம் கொண்ட ராட்சத முதலை ஒன்று இன்று காலை ஊர்ந்து வந்து தஞ்சம் புகுந்துள்ளது. பொது மக்கள் முதலை படுத்திருப்பதை கண்டு அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

இரவு பெய்த கனமழை காரணமாக கால்வாய் வழியாக முதலை ஊருக்குள் புகுந்ததாக கூறப்படுகிறது. வனத்துறை மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு மற்றும் வனத்துறையினர், முதலையைப் பிடித்து பாதுகாப்பான பகுதியில் விட்டனர்.

புதிய அரசு பதவியேற்பு குறித்து

# தலைமைச் செயலாளர், டிஜிபி, அதிகாரிகள் ஆலோசனை

சென்னை, மே. 6

தமிழகத்தில் புதிதாக அரசு பொறுப்பேற்கவுள்ள நிலையில், தலைமைச் செயலாளர் மற்றும் டிஜிபி ஆகியோர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகின்றனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட பல்வேறு அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது. இதனையடுத்து தவெகவின் சட்டமன்றக் குழு தலைவராக அக்கட்சியின் தலைவர் விஜய் இன்று ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தச் சூழலில், ஆட்சியமைக்க உரிமை கோரி ஆளுநருக்கு விஜய் கடிதம் எழுதியுள்ளார்.

தவெக தலைமையிலான புதிய அரசு அமையவுள்ள நிலையில், பதவியேற்பு விழா மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்க இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் தலைமைச் செயலாளர் சாய்குமார், உள்துறை செயலாளர் மணிவாசன், காவல் துறை டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உள்ளிட்ட பல்வேறு உயர் அதிகாரிகளும் பங்கேற்றுள்ளனர்.



பண்ருட்டி சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை கே.மோகன் தேர்தல் நடத்தும் அலுவலர் கமலம் பெற்றுக் கொண்டார்



கடலூர் சட்டமன்ற தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட ராஜ்குமார் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை தேர்தல் நடத்தும் அலுவலர் சுந்தர்ராஜனிடம் பெற்றுக் கொண்டார்.

# நிரந்தர தீர்வு கிடைக்க வழிவகை செய்யுமாறும் கோரி தேனி நிரந்தர மக்கள் நீதிமன்ற நீதிபதி, ரஜினி நேரில் வந்து மனு




தேனி, மே. 6

தேனி மாவட்டம், அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் கலைக் கல்லூரி மாணவர்கள் தங்களது கல்லூரி அமைந்திருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள பகுதியில் நகராட்சி குப்பைகள் மலைப்போல் குவிந்துள்ளதாகவும், அதனால் அங்கு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு உடல்நலக் குறைபாடுகளும், சுவாசக் கோளாறுகளும் ஏற்படுவதாகக் கோரியும், அதுதவிர குப்பைகளை குறைத்து இந்த பிரச்சனையிலிருந்து ஒரு தீர்வு கிடைக்க வழிவகை செய்யுமாறும் கோரிதேனி, நிரந்தர மக்கள் நீதிமன்ற நீதிபதி, ரஜினி நேரில் வந்து மனு செய்திருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, நிரந்தர மக்கள் நீதிமன்றம் சார்பில் தேனி அல்லி நகர நகராட்சி ஆணையாளர் பார்கவி நேரில் ஆஜராக அறிவிப்பு அனுப்பப்பட்டு அழைக்கப்பட்டு, இரு தரப்பினரிடமும் கலந்தாலோசனை நடத்தப்பட்டது. அதனடிப்படையில் நிரந்தர மக்கள் நீதிமன்ற நீதிபதி ரஜினி ஆலோசனையின்படி கடந்த 2 1/2 மாதங்களாக மட்காத குப்பைகளை தரம் பிரித்தெடுக்கப்பட்டு கண்டெய்னர் லாரிகள் மூலம் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பப்பட்டு தற்போது 173 டன் அளவிற்கும் மேலான குப்பைகள் குறைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இன்னும் 45 நாட்களுக்குள் முற்றிலுமாக குப்பைகளை அகற்றி மறுசுழற்றி செய்து கல்லூரியைச் சுற்றிலும் சுகாரமான சூழல் உருவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், கல்லூரி மாணவர்களின் நலன் கருதி நகராட்சி குப்பைக் கிடங்கினைச் சுற்றி கான்கிரீட் சுற்றுச் சுவர் எழுப்ப நிரந்தர மக்கள் நீதிமன்ற நீதிபதி, ரஜினி அறிவுறுத்தலின்படி தேனி அல்லி நகர நகராட்சி ஆணையாளர் மூலம் நிதி ஒதுக்கீடு கோரி அரசாங்கத்திடம் முன்மொழிவு கோப்பு தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளது என கல்லூரி மாணவ மாணவிகளின் சுகாதாரம் தொடர்பான கோரிக்கைக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அறிக்கை மற்றும் கோப்புகளை தேனி அல்லி நகர நகராட்சி ஆணையாளர் மற்றும் அதிகாரிகள் நிரந்தர மக்கள் நீதிமன்ற நீதிபதி, ரஜினி யிடம் சமர்பித்தார்கள்.



தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் தமிழக வெற்றி கழகம் தலைவர் விஜய் வெற்றி பெற்றதை ஒட்டி தமிழகத்தில் அநேக இடங்களில் வெற்றி பெற்றது. ஆலங்குளம் சட்டமன்றத்தில் தமிழக வெற்றி கழக கட்சி நிர்வாகிகள் இளைஞர்கள் அங்குள்ள காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மகிழ்ச்சியோடு விஜய் வாழ்க பட்டாசு வெடித்து பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.